**செ. கு. எண்**: 19 **நாள்**:14.01.2013

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 14.1.2013

நாகப்பட்டினம் மாவட்டம், வானவன் மகாதேவி மீனவ கிராமத்தைச் சேர்ந்த திரு. வாலையன் என்பவரின் மகன் கமலப்பன், நம்பியார் நகர் மீனவர் கிராமத்தைச் சேர்ந்த திரு. கோவிந்தசாமி என்பவரின் மகன் கிருஷ்ணசாமி ஆகிய இருவரும் கண்ணாடி நாரிழை படகில் தஞ்சாவூர் மாவட்டம், மல்லிப்பட்டினம் அருகில் மீன் பிடிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது கடலில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த விபத்தில் அகால மரணமடைந்த மீனவர்கள் கமலப்பன் மற்றும் கிருஷ்ணசாமி ஆகியோரின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவத்தில் காலமான கமலப்பன் மற்றும் கிருஷ்ணசாமி ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**